5. உலகின் மாந்தரே (கிறிஸ்துமஸ் வாழ்த்துப் பாடல்))

பாடல்: ராஜரத்தினம்

இசை:இம்மானுவேல்

பாடியவர்: சாம்.பி.கீர்த்தன்

இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

உலகின் மாந்தரே
மலர்ந்தது மாபெரும் நற்செய்தியே
இறைவன் மக்களே
புலர்ந்தது உங்களின் மா மகிழ்வே
மீட்பர் பிறந்தார் வாழ்த்துக்கள்
ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்
மேசியா பிறந்தார் வாழ்த்துக்கள்
ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்

1. பிறந்தவர் அமைதியின் அரசராவார்
   அமைதியை அவனியில் விதைத்திடுவார்
   நம்பிடுங்கள் அவரே நலம் தருவார்
   வேண்டிடுங்கள் அவர் புது வாழ்வளிப்பார்

2. இடையரும் பாலனிடம் வந்தனரே
   புறவின மாதிரியாய் நின்றனரே
   யாவருக்கும் இயேசு உரியவரே
   சாற்றிடுவோம் அது நம் கடனே